டிசம்பர் – 17

# TNPSC துளிகள்

- ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள லண்டனில் நடத்தப்பட்ட அழகிப் போட்டியில் ஜமைக்காவைச் சேர்ந்த டோனி - ஆன் சிங் என்பவர் 2019 ஆம் ஆண்டின் உலக அழகியாக (மிஸ் வேர்ல்ட்) முடி சூட்டப் பட்டார்.
    - இவர் 2018 ஆம் ஆண்டின் உலக அழகிப் போட்டியின் வெற்றியாளரான மெக்ஸிகோவைச் சேர்ந்த வனேசா போன்ஸ் டி லியோனிடமிருந்து தனக்கான உலக அழகி கிரீடத்தைப் பெற்றார்.
- லாகூர் மற்றும் வாகா ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையிலான ரயில் சேவையானது 22 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு 2019 டிசம்பர் மாதத்தில் மீண்டும் செயல்படத் தொடங்கியது.
    - இந்த ரயில் சேவையானது 1947 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டு வரை செயல்பட்டது. ஆனால் இந்தச் சேவையானது சில செயல்பாடுகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான காரணங்களால் நிறுத்தப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## "அணுகக்கூடிய இந்தியா" பிரச்சாரம்

- "சுகமியா பாரத் அபியான்" என்று அழைக்கப் படும் "அணுகக் கூடிய இந்தியா" என்ற பிரச்சாரமானது (Accessible India Campaign - AIC) 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தியப் பிரதமரால் தொடங்கப்பட்டது.
- இது மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.
- இந்தத் திட்டமானது மாற்றுத் திறனாளிகள் அணுகும் வகையில் நாட்டில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- AICயின் காலக்கெடுவானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்கப் பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

## நிர்பயா நிதி – தற்போதைய நிலை

- அரசாங்கத் தரவுகளின் படி, 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட நிர்பயா நிதியத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் 20% க்கும் குறைவான அளவு நிதியை மட்டுமே பயன்படுத்தியுள்ளன.
- தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிர்பயா நிதியில் தமிழகம் 3% நிதியை மட்டுமே பயன்படுத்தி உள்ளது (ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 190.68 கோடி மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி ரூ. 6 கோடி).

| வரிசை எண் | முதலில் உள்ள 5 மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்கள் | கடைசி இடங்களில் உள்ள 5 மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்கள் |
|---|---|---|
| 1 | சண்டிகர் (59.83%) | மணிப்பூர் (0%) |
| 2 | மிசோரம் (56.32%) | மகாராஷ்டிரா (0%) |

| | | |
|---|---|---|
| 3 | உத்தரகண்ட் (51.68%) | லட்சத் தீவுகள் (0%) |
| 4 | ஆந்திரப் பிரதேசம் (43.23%) | மேற்கு வங்காளம் (0.76%) |
| 5 | நாகாலாந்து(38.17%). | தில்லி (0.84%) |

*நிர்பயா நிதி பற்றி*

- இந்த நிதியானது மத்திய நிதி அமைச்சகத்தினால் 2013 ஆம் ஆண்டில் 1000 கோடி ரூபாய் நிதித் தொகையுடன் உருவாக்கப் பட்டது.
- இந்த நிதியானது நாட்டில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஒரு காலாவதியாகாத (non-lapsable) நிதியாகும்.
- இது மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தைச் சேர்ந்த செயலாளரின் கீழ் உள்ள அதிகாரமளிப்பு அதிகாரிகள் குழுவினால் கண்காணிக்கப் பட்டு வருகின்றது.

## அருகலை வழியாக பேச்சுத் தொடர்பு

- இந்தியாவில் முதல்முறையாக பாரதி ஏர்டெல் நிறுவனமானது அருகலை வழியாக பேச்சுத் தொடர்பை Voice over Wi-Fi - VoWiFi) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது உயர் தெளிவுத் திறன் கொண்ட (high definition - HD) குரல் அழைப்புகளை மேற்கொள்ள மற்றும் குரல் அழைப்புகளைப் பெற அகலப் பட்டையின் மூலம் கிடைக்கக் கூடிய அதிவேக இணைய இணைப்பைப் பயன்படுத்துகின்றது.
- அருகலை வசதியைப் பயன்படுத்துவதால் பயனர்கள் இந்த அழைப்புகளுக்கு கூடுதல் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.
- இது குறிப்பாக செல்லிடப் பேசி அமைப்புகள் வலுவாக இல்லாத பகுதிகளுக்கு அருகலை வழியாக பேச்சுத் தொடர்பு வசதியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## TECH 2019 - யுனெஸ்கோ மற்றும் MGIEP

- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பானது (United Nations Education, Scientific and Cultural Organisation - UNESCO) அமைதிக்கான மகாத்மா காந்தி கல்வி நிறுவனத்துடன் (Mahatma Gandhi Institute of Education for Peace - MGIEP) இணைந்து TECH 2019ஐ நடத்தியுள்ளது.
- கற்றல் மற்றும் கற்பித்தல் ஆகியவற்றிற்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்து விவாதிப்பதற்காக இந்த TECH கருத்தரங்கு நடத்தப்பட்டது.
- TECH என்பது மனிதநேயத்திற்கான மாறிவரும் கல்விமுறைக் கருத்தரங்கு என்பதைக் குறிக்கின்றது.
- இந்தக் கருத்தரங்கானது டிஜிட்டல் தொழில்நுட்பத்தை ஒரு நிலையான வகையில் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 'யுனெஸ்கோ MGIEPயின் நண்பர்கள்' எனப்படும் நாடுகளைக் கொண்ட குழுவிலும் கவனம் செலுத்தியது.

- இந்தக் கருத்தரங்கில் 'டிஜிட்டல் கற்றலுக்கான வழிகாட்டுதல்கள்' குறித்த "விசாகப் பட்டினம் பிரகடனத்தின்" மீதும் கவனம் செலுத்தப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## செவ்வாய் கிரகத்தில் காற்று ஓட்ட முறை - நாசா

- நாசாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் செவ்வாய் கிரகத்தின் மேல் வளிமண்டலத்தில் (சிவப்புக் கிரகம்) காற்று சுழற்சி முறைகளைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த ஆய்வானது "அறிவியல்" என்ற இதழில் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த ஆய்வானது 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் மாதத்திற்கு இரண்டு நாட்கள் என்ற அளவில் MAVEN ஆல் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- "செங்குத்து அலைகள்" என்று அழைக்கப்படும் செவ்வாய் கிரகத்தில் உள்ள காற்று அலைகள் எந்த மாற்றங்களும் இல்லாமல் நீண்ட காலம் நீடித்தன என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

# மாநிலச் செய்திகள்

## முதலாவது மெய்நிகர் காவல் நிலையம் – ஆந்திரப் பிரதேசம்

- ஆந்திரப் பிரதேசத்தின் முதல்வரான ஜெகன்மோகன் ரெட்டி விசாகப் பட்டினத்தில் உள்ள ஆந்திரப் பல்கலைக் கழகத்தில் முதலாவது மெய்நிகர் காவல் நிலையத்தைத் திறந்து வைத்தார்.
- மெய்நிகர் காவல் நிலையம் என்ற கருத்தானது ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான பிரசாத் ரெட்டியால் முன்மொழியப் பட்டது. இந்த மெய்நிகர் காவல் நிலையமானது மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தக் காவல் நிலையமானது புகார் கண்காணிப்பு மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய வழிமுறை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

## டிராக்கியா மென்பொருள் – ஹரியானா காவல்துறை

- ஹரியானா காவல் துறையானது ஒரு தனித்துவமான பட்டைக் குறிமுறை கொண்ட மென்பொருளை ஏற்றுக் கொண்டுள்ளது.
- தடயவியல் அறிக்கைகளுக்காக இந்த தனித்துவமான பட்டைக் குறிமுறை மென்பொருளை அறிமுகப்படுத்திய நாட்டின் முதலாவது காவல்துறை இதுவாகும்.
- 1000ற்கும் மேற்பட்ட டிஜிட்டல் தடயவியல் அறிக்கைகளைப் பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இந்த மென்பொருள் பயன்படுத்தப் படுகின்றது.
- குற்றம் நடந்த இடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளுக்கு இது ஒரு ஊடுருவ இயலாத பாதுகாப்பை வழங்குகின்றது. மேலும் இது இந்த அறிக்கைகளின் தடையில்லா கண்காணிப்பு முறையையும் உருவாக்குகின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2020 கிரிஸ்டல் விருது – உலகப் பொருளாதார மன்றம்

- உலகப் பொருளாதார மன்றமானது (WEF - World Economic Forum) 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர கிரிஸ்டல் விருதின் 26வது பதிப்பின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.
- WEFன் 2020 ஆம் ஆண்டிற்கான கிரிஸ்டல் விருதைப் பெறுபவர்கள்:
    - ஜின் ஜிங் - சீனா,
    - தியேஸ்டர் கேட்ஸ் - சிகாகோ,
    - லினெட் வால்வொர்த் - ஆஸ்திரேலியா,
    - தீபிகா படுகோன் - இந்திய நடிகை.

***உலகப் பொருளாதார மன்றம் (WEF) பற்றி***

- WEF ஆனது 1971 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு லாப நோக்கற்ற அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் உள்ளது.
- WEF ஆல் வெளியிடப்படும் அறிக்கைகள் பின்வருமாறு:
    - உலகளாவியப் போட்டித் திறன் அறிக்கை,
    - உலகளாவியப் பாலின இடைவெளி அறிக்கை,
    - உலகளாவிய அபாய அறிக்கை,
    - உலகளாவியப் பயண மற்றும் சுற்றுலா அறிக்கை.

## டைம் பத்திரிக்கையின் ஆண்டின் சிறந்த நபர் - கிரெட்டா துன்பெர்க்

- டைம் பத்திரிகையானது ஸ்வீடனைச் சேர்ந்த காலநிலைப் பிரச்சினை தொடர்பான சமூக ஆர்வலரான கிரெட்டா துன்பெர்க்கை 2019 ஆம் ஆண்டின் சிறந்த நபராகத் தேர்வு செய்துள்ளது.
- இவர் "#FridaysforFuture" என்ற இயக்கத்திற்காக மிகவும் வெகுவாக அறியப்படுகின்றார்.
- இது டைம் என்ற அமெரிக்க செய்தி இதழின் ஆண்டுப் பதிப்பாகும்.
- இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட இளம் வயது நபர் துன்பெர்க் (16) ஆவார்.
- டைம் பத்திரிக்கையானது உலகத் தலைவராக இல்லாத ஒரு நபரை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக சிறந்த நபராகத் தேர்ந்தெடுத்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | Greta Thunberg | Climate activist | Person of the Year |
| 2 | Bob Iger | Chairman and CEO of The Walt Disney Company | Businessperson of the Year |
| 3 | The Public Servants | Federal workers of the US | Guardians of the Year |
| 4 | United States women's national soccer team | Women's Soccer | Athlete of the Year |
| 5 | Melissa Jefferson (Lizzo) | Singer | Entertainer of the Year |



# முக்கிய தினங்கள்

## தேசிய எரிசக்திப் பாதுகாப்பு தினம் - டிசம்பர் 14

- மத்திய மின் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள எரிசக்தி திறன் அமைப்பானது (BEE - Bureau of Energy Efficiency) இத்தினக் கொண்டாட்டங்களுக்குத் தலைமை தாங்குகின்றது.
- இத்தினமானது 1991 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப் படுகின்றது. எரிசக்தியைப் பாதுகாத்து அதனை சேமிப்பதில் அரசின் சாதனைகளை எடுத்துக் காட்டுவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.
- எரிசக்திப் பாதுகாப்பு மற்றும் எரிசக்தி செயல்திறனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்:
    - எரிசக்திப் பாதுகாப்பு கட்டிடக் குறியீடு (Energy Conservation Building Codes - ECBC)
    - செயல்படுத்து, இலக்கை அடை மற்றும் வர்த்தகம் செய் என்ற திட்டம் (Perform Achieve and Trade Scheme - PAT)
    - உஜாலா திட்டம்

***BEE பற்றி***

- இது 2002 ஆம் ஆண்டு மார்ச் 1 அன்று நிறுவப் பட்டது.
- இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ளது.
- சட்டம் - எரிசக்திப் பாதுகாப்புச் சட்டம், 2001.
- இது ஒரு சட்டரீதியான அமைப்பாகும்.
- பொறுப்பு - எரிசக்தித் திறன் மற்றும் பாதுகாப்பை ஊக்குவித்தல்.

***தேசிய எரிசக்தி பாதுகாப்பு வாரம்***

- தேசிய எரிசக்திப் பாதுகாப்பு வாரமானது ஆண்டுதோறும் டிசம்பர் 14 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை கொண்டாடப் படுகின்றது.


## சர்வதேச தேநீர் தினம் - டிசம்பர் 15

- சர்வதேச தேயிலை தினமானது இந்தியாவில் ஆண்டுதோறும் 2005 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 15 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகின்றது.
- தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களின் நிலையை மேம்படுத்துவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.
- ஏற்கனவே இந்தியாவின் நடவடிக்கையால் ஐக்கிய நாடுகள் சபையானது மே 21 ஆம் தேதியை சர்வதேச தேநீர் தினமாக அறிவித்துள்ளது.



### விஜய் திவாஸ் - டிசம்பர் 16

- 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய - பாகிஸ்தான் போரில் பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் வெற்றியைக் குறிக்கும் விதமாக விஜய் திவாஸின் (வெற்றி நாள்) 49வது ஆண்டு விழா 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 16 அன்று கொண்டாடப்பட்டது.
- 1971 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரு நாடுகளுக்கும் இடையிலான இந்தப் போரின் போது உயிரிழந்த ராணுவ வீரர்களை கௌரவிக்கும் விதமாக இந்தத் தினமானது கொண்டாடப் படுகின்றது.
- இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியானது வங்க தேச நாடு உருவாக வழி வகுத்தது.
- பாகிஸ்தானில் இருந்து வங்க தேசம் விடுதலை அடைந்ததைக் குறிக்கும் விதமாக இந்தத் தினத்தை வங்க தேசம் கொண்டாடுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் டாக்கா அணிவகுப்பில் இந்திய ராணுவம் முதல்முறையாக பங்கேற்றது.




## இதரச் செய்திகள்

### நுவாட் தாய் உடல் வருடுதல் - யுனெஸ்கோவின் புலப்படாத பாரம்பரியப் பட்டியல்

- யுனெஸ்கோ அமைப்பானது தாய்லாந்தின் "நுவாட்" தாய் உடல் வருடலைத் தனது மனித குலத்தின் புலப்படாத கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலின் ஒரு பகுதியாக அங்கீகரித்துள்ளது.
- நுவாட் உடல் வருடலானது தசை வலிகளைத் தீர்க்க உதவும் சிக்கலான பகுதிகளைச் சுற்றியுள்ள இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன.
- 2008 ஆம் ஆண்டில் புலப்படாத கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த போது இந்தப் பட்டியல் நிறுவப் பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★